**5201**

September 2015

பதிவு எண் | | | | | | |

# பகுதி I – தமிழ் – முதல் தாள்

## (செய்யுளும், இலக்கணமும்)

# Language – Part I – TAMIL – Paper I

நேரம் : 3 மணி ] [ மதிப்பெண்கள் : 100

அறிவுரை : (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்து கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : (i) விடைகள் தெளிவாகவும் குறிப்பிட்ட அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) வினா எண் VI -க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்

I. பின்வரும் வினாக்கள் **எவையேனும் நான்கனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **ஐந்து வரிகளில்** விடை எழுதுக. **4x2=8**

1. நாடோறும் எதனைப் பாடுதல் வேண்டும்?

2. புறநானூற்றால் அறியப்படும் செய்திகள் யாவை?

3. மறவற்க எனவும் துறவற்க எனவும் வள்ளுவர் எவற்றைக் குறிப்பிடுகிறார்?

4. முக்கூடலில் கூடும் ஆறுகள் யாவை?

5. பாவேந்தர் நூல்களுள் நான்கின் பெயரினை எழுதுக.

6. தேவார மூவர் யார்?

[ திருப்புக

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து** வரிகளில் விடை எழுதுக. 3x4=12

7. வரதநஞ்சையப் பிள்ளை எக்காரணங்களால் தமிழன்னையை வாழ்த்துவம் என்று கூறுகிறார்?

8. தலைவன் வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியதை விளக்குக.

9. அறிவின் இலக்கணத்தை எழுதுக.

10. கோவலனைக் கண்ட பொழுது நிகழ்ந்த அற்புதம் யாது?

11. பேழையை மீட்டுத் தருமாறு அன்னம் வேலனை எவ்வாறு வேண்டிக் கொண்டாள்?

III. பின்வரும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ஒவ்வொன்றிற்கும் **பத்து** வரிகளில் விடை எழுதுக. 3x4=12

12. தென்கரை நாட்டின் வளம் குறித்து முக்கூடற்பள்ளு உரைப்பனவற்றை எழுதுக.

13. பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பற்றிக் குறிப்பு எழுதுக.

14. சுவடிச் சாலையில் இருக்க வேண்டிய நூல்கள் யாவை?

15. குலசேகர ஆழ்வார் வேண்டுவதும் வேண்டாததும் யாவை?

16. மணிமேகலா தெய்வம் புத்தபிரானைப் போற்றி செய்தமை யாங்ஙனம்?

IV. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு இருபது வரிகளில்** விடை எழுதுக. 1x8=8

17. பொறையுடைமை என்னும் அதிகாரம் வெளிப்படுத்தும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

18. சீதையை அனுமன் கண்டு வந்து கூறிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

19. குழந்தைத் தொழிலாளர் அவல நிலையைக் கவிஞர் அப்துல்ரகுமான் கூறுமாறு தொகுத்து வரைக.

V. பின்வரும் செய்யுளடிகளின் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. 4x1=4

20. ''கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்
பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ''
(அ) இச்செய்யுளடிகள் எந்நூலில் இடம் பெற்றுள்ளது?
(ஆ) இவ்வடிகளைப் பாடிய புலவர் யார்?
(இ) 'கடுந்திறலொருவன்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளவர் யார்?
(ஈ) கூர்ம்படை - பொருள் தருக.

**அல்லது**

21. ''கல்லை யேற்றலும் கவணினைச் சுழற்றலு மக்கல்
ஒல்லை யோட்டலு மொருவருங் காண்கிலர்''
(அ) இவ்வடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?
(ஆ) இவ்வடிகளைப் பாடிய புலவர் யார்?
(இ) கவணினைச் சுழற்றியவன் யார்?
(ஈ) யார்யாரிடையே இந்த யுத்தம் நிகழ்ந்தது?

VI. 22. ''கண்டனென்'' எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலை எழுதி அதன் பா வகையையும் எழுதுக. 4+2=6

23. ''அறிவற்றங்.....'' எனத் தொடங்கும் குறளையும் ''மகற்கு'' என முடியும் குறளையும் எழுதுக. 2+2=4

VII. 24. எவையேனும் **இரண்டு** சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக. 2+2=4

| | |
|---|---|
| (அ) மணந்த | (ஈ) நோக்கி |
| (ஆ) செய்க | (உ) புனைந்தோம் |
| (இ) அழைப்பான் | (ஊ) ஆடுகின்ற |

25. பின்வரும் தொடர்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** இலக்கணக் குறிப்பு தருக. 3x2=6

| | |
|---|---|
| (அ) உயர்சினை | (ஈ) மாமணி |
| (ஆ) அருந்துயர் | (உ) அறைந்தறைந்து |
| (இ) தழீஇ | (ஊ) அவியா |

[ திருப்புக

26. எவையேனும் **இரண்டு** தொடர்களுக்குப் புணர்ச்சி விதி தருக. 2x2=4

(அ) மாசற்றார் (ஈ) கண்ணுடையார்

(ஆ) பூங்கொடியாள் (உ) குடிசையாகும்

(இ) மணிக்கழுத்து (ஊ) கருங்கல்

27. சான்று தந்து விளக்குக. 1x4=4

நெய்தல் திணை

அல்லது

பொருண்மொழிக் காஞ்சித் துறை

28. ''உதவி வரைத்தன் றுதவி உதவி 1x4=4

செயப்பட்டார் சால்பின் வரைத்து''

- இக்குறட்பாவில் அமைந்துள்ள அணியைச் சுட்டி விளக்குக.

அல்லது

எடுத்துக்காட்டு உவமையணி அல்லது தற்குறிப்பேற்ற அணி விளக்குக.

VIII. பொருத்துக. 4x1=4

| | புலவர்கள் | இயற்றிய நூல்கள் |
|---|---|---|
| 29. | இளங்கோவடிகள் | மணிமேகலை |
| 30. | திருத்தக்கதேவர் | சிலப்பதிகாரம் |
| 31. | நாதகுத்தனார் | சீவகசிந்தாமணி |
| 32. | சீத்தலைச் சாத்தனார் | வளையாபதி |
| | | குண்டலகேசி |

IX. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 16x1=16

33. கம்பர் காலத்தில் வாழ்ந்த புலவர்களுள் ஒருவர் :

(அ) நக்கீரர்

(ஆ) ஒட்டக்கூத்தர்

(இ) இளங்கோவடிகள்

34. அகநானூறு - சரியாகப் பிரித்தெழுதுக.

(அ) அகம் + நான்கு + நூறு

(ஆ) அக + நானூறு

(இ) அகம் + நானூறு

35. குறுந்தொகைக்குக் கடவுள் வாழ்த்துப் பாடியவர் :

(அ) பெருந்தேவனார்

(ஆ) வரந்தருவார்

(இ) கபிலர்

36. திருக்குறளில் அமைந்துள்ள இயல்கள் :

(அ) 4 (ஆ) 9 (இ) 30

37. அறத்துப்பாலில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை :

(அ) 70 (ஆ) 38 (இ) 25

38. ''தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை தேறும் சிலப்பதிகாரம்'' என்று பாராட்டியவர் :

(அ) பாரதிதாசன்

(ஆ) பாரதியார்

(இ) கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

39. இராமன் கொடுத்ததாகச் சீதையிடம் அனுமன் காட்டியது :

(அ) கணையாழி

(ஆ) அணிமணிகள்

(இ) கடிதம்

40. வீரமாமுனிவர் தொகுத்த அகராதி :

(அ) சதுரகராதி

(ஆ) பேரகராதி

(இ) அரும்பத அகராதி

41. பாரதிதாசன் வெளியிட்ட இலக்கிய இதழ் :

(அ) தென்றல்

(ஆ) குயில்

(இ) கிளி

42. தமிழில் தோன்றிய முதல் கலம்பகம் :

(அ) மதுரைக் கலம்பகம்

(ஆ) நந்திக் கலம்பகம்

(இ) காசிக் கலம்பகம்

43. கவிச்சக்கரவர்த்தி, கவிராட்சசன் என்றெல்லாம் புகழப்படுபவர் :

(அ) கம்பர்

(ஆ) ஒட்டக்கூத்தர்

(இ) இளங்கோவடிகள்

44. பதினெட்டு உறுப்புகளால் பாடப்படும் சிற்றிலக்கியம் :

(அ) உலா

(ஆ) பள்ளு

(இ) கலம்பகம்

45. 'பாரதி' என்பதன் பொருள் :

(அ) கலைமகள்

(ஆ) மலைமகள்

(இ) செல்வமகள்

46. பிரெஞ்சுக் குடியரசு தலைவரால் செவாலியர் விருதினைப் பெற்றவர் :

(அ) பாரதிதாசன்

(ஆ) வாணிதாசன்

(இ) முடியரசன்

47. 'கிறித்துவக் கம்பர்' என்று அழைக்கப்பட்டவர் :

(அ) கம்பர்

(ஆ) வீரமாமுனிவர்

(இ) எச்.ஏ. கிருஷ்ணப்பிள்ளை

48. சுந்தரர் தேவாரம் :

(அ) முதலாம் திருமுறை

(ஆ) ஏழாம் திருமுறை

(இ) பன்னிரண்டாம் திருமுறை

X. கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக. 2+2=4

49. காலத்தி னாற்செய்த ________ சிறிதெனினும்
ஞாலத்தின் ________ பெரிது.

50. எப்பொருள் யார்யார் வாய்க் ________ அப்பொருள்
________ காண்ப தறிவு.

- o O o -